தொகுதி-9 எண் 3
Vol. 9 No. 3

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. A. Palanisamy*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

ஆனி-புரட்டாசி 2052
**July - September 2021**

**ISSN : 2321-984X**

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

***Published by***

**RAJA PUBLICATIONS**

**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**29** பகுதி-10
**Part -10**

*Scanned with CamScanner*

# கிராமிய நீர் விநியோகத் திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பு: ஒரு மீளாய்வு

**எம். றிஸ்வான்**
சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல் துறை, கலை கலாசார பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**கட்டுரைச்சுருக்கம்**

பொதுவாக, கிராமிய குடிநீர் விநியோகத் திட்டங்களில் பயனாளர்களை (கிராம மக்களை) விட வெளித்தரப்பினர்கள் அதிக தலையீடு கொண்டிருந்தமையை இல்லாமல் செய்யும் ஒரு முக்கிய உத்தியாக பங்கேற்பு அணுகுமுறை பரிந்துரைக்கப்பட்டது. சமுதாயப் பங்கேற்பின் மூலம் பயனாளர்கள், திட்டங்களின் ஒவ்வொரு படித்தரங்களிலும் ஈடுபட்டு அத்தகைய திட்டங்கள் வெற்றி பெறவும் நிலைத்து நிற்கவும் செயற்படுவர். இதனால், சமுதாயப் பங்கேற்பானது குறிப்பாக கிராமிய குடிநீர் நீர் விநியோக செயற்திட்டங்களில் மிக ஆழமான கண்ணோட்டத்தில் இன்று ஆராயப்படுகின்றது. இத்தகைய பின்னணியில், இக்கட்டுரையானது கிராமிய குடிநீர் விநியோகத் திட்டங்களில் எவ்வளவு தூரம் சமுதாயப் பங்கேற்பு முறைமை உள்வாங்கப்பட்டுள்ளது அல்லது பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிவதை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. முறைப்படுத்தப்பட்ட இலக்கிய மீளாய்வு (SLR) மூலமாக பெறப்பட்ட தரவுகள் பிரதான கலந்துரையாடலுக்கு பயன்படுத்தப்பட்டு உள்ளன. ஆய்வுப் பெறுகைகள், கலந்துரையாடல்கள் என்பன விவரிப்பு முறையில் இக்கட்டுரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வு, சமுதாயப் பங்கேற்பானது கிராமிய குடிநீர் வினியோகத் திட்டங்களில் ஒரு சிறந்த பொறிமுறையாக இருக்கின்றமையை சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் சமுதாயப் பங்கேற்பு மூலமே ஒரு திட்டம் அதன் இலக்குகளை அடையவும், திட்டங்கள் வெற்றி பெறவும் நிலைத்து நிற்கவும் காரணியாய் அமையும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தியுள்ளது.

**திறவுச்சொற்கள்:** தூய குடிநீர், சமுதாயப் பங்கேற்பு, பங்கேற்பு அணுகுமுறை, கிராமிய நீர் விநியோகம், திட்டங்களின் நிலைபேற்றுத் தன்மை

## அறிமுகம்

தூய குடிநீரை (safe drinking water) பெறுவதும் சிறந்த சௌக்கிய சேவையை (better sanitation facilities) பெற்றுக்கொள்வதும் ஒரு பாரிய சவால்மிக்க விடயமாக இன்று மாறிவருகின்றது (World Bank, 2001) உலகம் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகளுள் குடிநீர் மற்றும் சௌக்கிய சேவைகள் (drinking water and sanitation) என்பன மிக அதிக விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய விவகாரமாக மாறியுள்ளதுடன் அது சமூக, பொருளாதார, சுகாதார மற்றும் சூழல்சார் பல்பரிமாணப் பிரச்சினையாகவும் அடையாளப்படுத்தப்-பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பின் கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு வருடமும் உலகளாவிய ரீதியில் 3 தொடக்கம் 4 மில்லியன் மக்கள் குடிநீர் மற்றும் சௌக்கியம் தொடர்பான பிரச்சினைகள் மூலம் இறக்கின்றார்கள். இவ்வாறு இறப்பவர்களுள் சுமார் 2 மில்லியன் சிறுவர்கள் உள்ளடங்குவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது (World Bank, 2001; and Cosgrove & Rijsberman, 2000).

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப் பொறுத்தவரையில், அங்கு அதிகளவான இறப்புக்கள் நிகழ்வதற்கு காரணம் அந்நாடுகளில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கும் சௌக்கிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குமான வசதிகள் மிகக் குறைந்த அளவில் காணப்படுவதாகும். இதனால் உலகில்



Scanned with CamScanner

காணப்படும் பல்வேறு தாபனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் குடிநீர் மற்றும் சௌக்கிய சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக பல மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இருப்பினும் இத்தகைய செயற்திட்டங்கள் மூலம் குடிநீர் மற்றும் சௌக்கிய சேவைகள் இதுவரைக்கும் அந்நாடுகளில் மேம்படுத்தப்பட்டுள்ளதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

வேறு வகையில் நோக்கும்போது, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் காணப்படும் சனத்தொகை அதிகரிப்பு, சுற்றாடல் மாசடைவு, வறுமை, வளப் பங்கீடு, தொழில்நுட்ப பிரச்சினை, முதலீடுகள் மற்றும் வளப்பங்கீட்டில் காணப்படுகின்ற முறைகேடுகள் போன்றன அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எதிர்கொள்ளப்படுகின்ற தடைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனால் குறித்த பிராந்தியங்களில் சிறந்த செயற்திட்டங்களை உருவாக்க அல்லது நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளமை ஒரு சவால்மிக்க விடயமாகும் (Briscoa, 1993).

குடிநீர், சௌக்கியம், கிராமிய அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு போன்ற அதிகமான செயற்திட்டங்களை எடுத்து நோக்கும் போது அங்கு சமுதாயத்தின் (பயனாளர்களின்) தேவைகள், விருப்புகள், வழக்கம், நம்பிக்கைகள், மதிப்புகள், சமூக-அரசியல், பொருளாதார அமைப்புக்கள் என்பன திட்டங்களில் உள்வாங்கப்படுவதில்லை. ஆகவே, இத்தகைய அபிவிருத்தி திட்டங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியாமைக்கான காரணம் யாதெனில் அத்திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பு உள்வாங்கப்படுவதில்லை என்பதாகும். எனவே, எந்தவொரு செயற்திட்டத்தை எடுத்து நோக்கும் போதும் அதில் சமூகத்தின் (அதாவது திட்டத்தால் பயனடையக்கூடிய மக்களின்) பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் உள்ளூர் மக்களின் தேவைகளை அறிவது, அவர்களிடம் காணப்படும் நுட்பமுறைகளை கண்டறிவது என்பன செயற்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்ளவும் அவற்றின் நிலைத்துநிற்கும் தன்மையை உறுதி செய்யவும் வழிவகுக்கும். எனவே, இத்தகைய பின்னணியில்தான் இக்கட்டுரையானது கிராமிய குடிநீர் விநியோகத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவு தூரம் சமூகப் பங்கேற்பு அவசியமானது என்பதனை வலியுறுத்த முயற்சிக்கின்றது. சமூகப் பங்கேற்பின் அவசியத்தை விபரிப்பதை அடிப்படை நோக்காகக் கொண்டுள்ள இக்கட்டுரை பல்வேறு ஆய்வுகளின் பெறுபேறுகள், வெளியீடுகள் மற்றும் கலந்துரையாடல்களை மையப்படுத்திய மீளாய்வாக அமைந்துள்ளது.

## முறையியல்

இக்கட்டுரையானது முறைபடுத்திய இலக்கிய மீளாய்வினை (SLR) அடிப்டையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதால், ஏலவே பிரசுரிக்கப்பட்ட பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் இதில் இரண்டாம் நிலை மூலங்களாக பிரதான மீளாய்வுக் கலந்துரையாடலுக்கு பயன்படுத்தப்படுள்ளன. குறிப்பாக கிராமிய குடிநீர் திட்டங்களை மையப்படுத்தி ஆபிரிக்க நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட வேறுபட்ட ஆய்வுகள் இதில் நோக்கப்பட்டுள்ளன. கென்யா, எதியோப்பியா, நைஜீரியா, கானா, சியாரா லியோன், மெக்சிக்கோ, சிலி (Kenya, Ethiopia, Nigeria, Gana, Sierra Leone, Mexico and Chilly) போன்ற நாடுகளின் கிராமிய நீர்வழங்கல் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இக்கட்டுரையில் பிரதான இடம்வகிக்கின்றன. அத்துடன் சமுதாயப் பங்கேற்பு பற்றிய நூல்கள், எண்ணக்கரு ரீதியான கட்டுரைகள், சர்வதேச தாபனங்களின் அறிக்கைகள், பிரசுரித்த மற்றும் பிரசுரிக்கப்படாத ஆய்வுகள் என்பனவும் இக்கட்டுரையில் மீளாய்வுகளுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளன. இத்தகைய பின்னணயில்



Scanned with CamScanner

மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுக் கட்டுரையில் சமுதாயப் பங்கேற்பு குறித்த தகவல்கள் எளிய விபரிப்பு முறையிலும் பிரதான மீளாய்வுப் பெறுகைகள் விவரண அடிப்படையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**மீளாய்வும் கலந்துரையாடலும்**

**கிராமிய குடிநீர் விநியோகத் திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பு**

கிராமிய நீர் வளங்கள் செயற்றிட்டங்களில் அதனைச் செயற்படுத்தல், பராமரித்தல், மற்றும் நிர்வகித்தல் தொடர்பான செயற்பாடுகளில் சமூதாயங்களின் பங்குபற்றல் பற்றி முதன்முதலாக நீர் வளங்கள் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கைகள் (National Policy for Water Resource Management and Development) அமைப்பினால் முன்வைக்கப்பட்ட 'பருவகால கட்டுரை' (sessional paper No.1 of 1999) யில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுரையில், செயற்திட்ட அபிவிருத்திகளின் அனைத்து கட்டங்களிலும் அதாவது திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், இயக்குதல், நிர்வகித்தல், பொருளாதார நிலையில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றில் சமூகங்களின் ஈடுபாட்டை உறுதிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. மேலும் இது கிராமிய நீர் விநியோக செயற்திட்டங்களில் இயக்கம் மற்றும் பராமரிப்பு (O&M) செயற்பாடுகளில் நிறுவன ரீதியான வசதிகளை மேற்கொள்வதில் சமூகங்களின் பங்களிப்பு எவ்வாறானதாக காணப்பட வேண்டும் என்பதை பரிந்துரை செய்கின்றது (Nyakwaka & Benard, 2019).

அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது அதில் சமுதாய பங்கேற்பு அதிகரிக்கப்படுமானால் மக்கள் மத்தியில் குறித்த செயற்திட்டம் தொடர்பான தமது உரிமம் (ownership) பற்றிய உணர்வு மேலும் வலுப்படுத்தப்படும் அல்லது அதிகரிக்கப்படும். அதிகமான கிராமிய குடிநீர் வழங்கல் திட்டங்கள் இன்று சமூகங்களால் இயக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2002ல் கொண்டுவரப்பட்ட குடிநீர்ச் சட்டம், சேவை வழங்குனர்கள் குடிநீர் தொடர்பான செயற்திட்டங்களை இயக்க விரும்பும் போது சமூக மட்ட குழுக்களுக்கு அவை வழங்கப்பட்ட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. இத்தகைய குழுக்களும் நிறுவனங்களும் (குறிப்பாக: சமூக-மைய ஒழுங்கமைப்புக்கள்) மக்கள் சார்பான உரிமத்தின் கீழ் குடிநீர் முறைமைகளை செயற்படுத்தும் என குறிப்பிடப்பட்டது (Nyakwaka & Benard, 2019).

ஒனியோ, கிரியு, தொவெட் மற்றும் லுவெகா (Oino, Kirui, Towett & Luvega, 2015) போன்றவர்களின் கூற்றுப்படி, சமூகப் பங்கேற்பு என்பது செயற்திட்டங்களின் நிலைபேற்றிற்கு திறவுகோலாக அமைகின்றது. செயட்திட்டங்களின் போதான உள்ளூர் மக்களின் சுறுசுறுப்பான பங்குபற்றலும், நேர்மையான ஈடுபாடும், சமனான பங்குபற்றல் மற்றும் அனுபவங்களும் உள்ளார்ந்த வகையில் செயற்திட்டங்களை வெற்றி பெறச் செய்யும் என கருதுகிறார்கள். அதேபோன்று மம்பூரி (Mamburi, 2014) யின் கூற்றுப்படி, ஒரு செயற்றிட்டத்தின் திட்டமிடல் தொடக்கம் கட்டுமானம் வரைக்குமான நிர்வாக நடவடிக்கைகளில் சமுதாயத்தினர் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் என்று வாதிடுகின்றார்.

சமுதாயத்தை முதன்மைப்படுத்தும் திட்டங்களில் உள்ளூர் மக்களின் தேவைகளுக்கு பதிலளிக்கக் கூடிய வகையில் திட்டமிடல்களும் வளம் தொடர்பான ஒதுக்கீடுகளும் கட்டாயம் இடம்பெறல் வேண்டும். இது சமூக நடவடிக்கைகள் மூலம் ஜனநாயகத்தை ஊக்குவிப்பதுடன், திட்டமிடலின் போதான சமுதாய ஈடுபாட்டையும் அதன் தரத்தையும் சேவையையும் மேம்படுத்துகின்றது. வினைத்திறன் மிக்க சமுதாய பங்கேற்பானது சமுதாயத் தேவைகளையும் மற்றும் செயற் திட்டங்களின் மூலம் சமூகம் பெறக்கூடிய பயன்கள் எவை என்பன பற்றியும் நோக்குகின்றது. பொதுமக்கள் பங்கேற்புக்கான



Scanned with CamScanner

சர்வதேச ஒழுங்கமைப்பு (International Association of Public Participation - IAPP) இன் கருத்துப்படி, ‘மக்களின் வினைத்திறனான பங்குபற்றல் மிக முக்கியமான ஒன்றாகும். அதன் மூலமே வளங்களை சிறப்பான முறையில் பகிர்ந்து, நிர்வகிக்கவும் மக்கள் தன்னார்வத்துடன் ஈடுபடவும் சிறந்த சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவும் முடியும்’ (Nyakwaka & Benard, 2019) என விபரிக்கின்றது.

அபிவிருத்தி திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பு உறுதி செய்யப்படுகின்றபோது அத்திட்டங்கள் நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்ததாக அமையும். இத்தகைய பங்கேற்பானது, மக்களை அபிவிருத்தி திட்டங்களில் பங்காளிகளாக மாற்றுகின்றது. குறிப்பாக, குடிநீர் வழங்கல் செயற்திட்டங்களை தயார்படுத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற விடயங்களில் மக்கள் சுறுசுறுப்பாக ஈடுபடவும் வாய்ப்பு கிடைக்கின்றது. இவ்வாறு அமையும் திட்டங்கள் பெரும்பாலும் வெற்றியடையும், ஏனெனில் இத்தகைய திட்டங்களில் உள்ளூர் மக்கள் சிறந்த அக்கறையுடன் ஈடுபட்டு அவர்களின் ஒருமித்த பங்கேற்பை உறுதிப்படுத்துவதால் ஆகும்.

மியாகத்ரா (Miakatra, 2014) தனது ஆய்வில் குறிப்பிடுகையில், `உலகில் குடிநீருக்கான வாய்ப்பை பெறுவதென்பதும் உட்கட்டமைப்பு வசதிகளை பெறுவதென்பதும் பூகோள அபிவிருத்தி இலக்குகளில் முக்கியம்பெறும் விடயங்களாகும். இது வறுமையை குறைத்து, மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, உள்ளூர் மக்கள் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாமே பங்கெடுக்க தேவையான திறனை வழங்குகின்றது. குடிநீர் வழங்கும் திட்டங்களின் தோல்விக்கு பிரதான காரணம் அத்தகைய திட்டங்களில் உள்ளூர் மக்களின் பங்கேற்பு குறைவாக அல்லது பலவீனமாக இருப்பதாகும். அரசாங்கங்கள் முன்னெடுக்கும் திட்டங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற அளவு மக்களின் பங்கேற்பு உறுதிப்படுத்தப் படுவதில்லை. இதனால் அத்தகைய திட்டங்களால் எதிர்பார்த்த பயன் கிடைப்பதுமில்லை, அவை நிலைபெற்ற தன்மை கொண்டதாய் அமைவதுமில்லை என வாதிடப்படுகின்றது. எனவே, சமுதாயப் பங்கேற்பு அதிகரிக்கப் படுகின்றபோது அபிவிருத்தியானது துரித அடிப்படையில் இடம்பெற்று திட்டங்கள் வெற்றியை நோக்கி நகர்த்தப்படும்.

பங்கேற்பு அணுகுமுறையானது சமூக பொருளாதார கற்கைகளுடன் இணைந்த ஒரு விடயமாக கொள்ளப்படுகின்றது. இது உள்ளூர் மக்களின் சுயாதீனமான ஈடுபாட்டையும் உள்ளூர் குழுக்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துவதாயும் அமைகின்றது. மக்கள் பங்கேற்பின் மூலம் பிரச்சினைகள் அடையாளம் காணப்படும் அத்துடன் அப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் முன்மொழியப்படும் அல்லது ஆலோசிக்கப்படும். இத்தகைய பங்கேற்பின் ஊடாக சமூகத்தில் கல்வி, சுகாதாரம், குடிநீர், வறுமை ஒழிப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சிறுவர் மேம்பாடு, பெண் வலுவூட்டல் போன்ற பல விடயங்களை மேம்படுத்த முடியும் (Oliver-De-Sardan, 2009; cited in: Miakatra, 2014).

மேலும் வறுமையை குறைப்பதற்கான முன்ஆயத்த செயற்படுகளில் ஒன்றாக சுத்தமான குடிநீர் வசதியை மேம்படுதலை குறிப்பிடலாம். சுத்தமான குடிநீர் வசதிகளை பெறலானது குடிநீர் மற்றும் சௌக்கியம் போன்றவற்றை ஊக்குவித்து மக்களை நோய்களில் இருந்து பாதுகாக்கின்றது. இதனால் மக்களுக்கான குடிநீரின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு பல்வேறு தாபனங்களும் நிதி வழங்குனர்களும் குடிநீர் மற்றும் சௌக்கியத்தை மேம்படுத்துவதற்காக பல ஆண்டுகளாக ஆர்வம் காட்டி வருவதுடன் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர் (Olajuyigbe, 2016).

ஒலாஜுயிக்பே (Olajuyigbe, 2016) நைஜீரியாவில் மேற்கொண்ட ஆய்வில், மனித



Scanned with CamScanner

ஆரோக்கியத்திற்கான குடிநீரின் முக்கியத்துவத்தை கருதிற்கொண்டு மில்லேனிய கிராமிய திட்டங்கள் (Millennium Village Project - MVP) ஒருங்கிணைந்த சமுதாயங்களுக்காக குறைந்த விலையில் குடிநீரைப் பெறக்கூடிய திட்டங்களை மில்லேனிய அபிவிருத்தி இலக்குகள் Clhf (Millennium Development Goals - MDGs) வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதை சுட்டிக்காட்டுகின்றார். இந்த இலக்கை அடைவதற்கான முக்கிய உத்தியாக சமுதாயப் பங்கேற்பு மிக உயர்ந்த அளவில் எதிர்பார்க்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

குடிநீர் வழங்கல் முகாமைத்துவமானது சமூகத்திற்கு போதுமான மற்றும் தரமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டது. இதன் விளைவாக குடிநீர் வழங்கல் நிர்வாகமானது சாதாரண குடும்பங்களில் இருந்து ஆரம்பமாவதுடன் குடிநீர் பற்றாக்குறை, அதிகரித்துவரும் சனத்தொகை அடர்த்தியால் ஏற்படும் சமூக சூழ்நிலைகளைப் பொறுத்து படிப்படியாக சிக்கலானதாக மாற்றமடைந்துள்ளது. குடிநீர் வழங்கல் முகாமைத்துவமானது நீர் விநியோகம் தொடர்பான திட்டமிடல், இயக்கம், அவதானிப்பு, செயற்பாடுகளின் மதிப்பீடு மற்றும் நிர்வாகம் என்பவற்றை வரையறுக்கின்றது (Olajuyigbe, 2016). இதனைத்தான் வைத்தகா (Waithaka, Kisovi & Obando, 2016) குறிப்பிடும்போது 'கிராமிய குடிநீர் வழங்கல் முகாமைத்துவங்களில் சமுதாயப் பங்கேற்பானது குடிநீர் தொடர்பான செயற்திட்டங்களின் நிலைபேற்றிற்கான முக்கியக் கூறுகளில் ஒன்றாக வலியுறுத்தப்படுகின்றது' என்பதை சுட்டிக் காட்டினார்.

சமுதாயப் பங்கேற்பானது சமூக பொருளாதார சூழல்களை நிர்வாகம் செய்யவும், உணவு பாதுகாப்பை பேணிக்கொள்ளவும், அடிப்படை சமூக சேவைகளை ஊக்குவிக்கவும் மற்றும் இயற்கை வளங்களின் அழிவுகளை குறைத்து, வறுமையை ஒழித்து, நிலையான அபிவிருத்தி செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கும் அவசியமான ஓர் அம்சமாக கருதப்படுகின்றது (World Bank, 2003). சம்பர்ஸ் (Chambers, 2007) இன் அவதானத்தின்படி ஆற்றல்மிக்க நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் கிராமப்புற செயற்திட்டங்களில் பங்குபற்றும் போது அங்கு காணப்படும் ஏழ்மையான வளங்கள் மற்றும் சூழல்களைப் பற்றி அவர்கள் அதிகமாக அறியக் கூடிய வாய்ப்புக் கிடைப்பதுடன் அவர்களின் வறுமை நிலையைக் குறைக்க கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பர் என கருதுகின்றார். அதேபோன்று பொருளாதார அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பு (Organization for Economic Development) 'கிராமிய அபிவிருத்தித் திட்டங்களில் சமூக பங்கேற்பானது ஒரு முக்கிய கொள்கையாக அடையாளம் காணப்படுகின்றது. இது கிராமங்களுக்கான குடிநீர் விநியோக சேவையைச் செயற்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் சமூகங்களுக்கு சாத்தியமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது' என விவரிக்கின்றது (OECD, 1985).

மேலும், சமுதாய பங்கேற்பானது சிறந்த ஆட்சிமுறையின் அளவுகோலாக கருதப்படுகின்றது. இதில் குடிமக்களான ஆண்கள், பெண்கள் அனைவரும் கொள்கைகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் போது தங்களது கருத்துக்களை நேரடியாகவோ அல்லது இடைத்தொடர்பு அமைப்புகள் ஊடாகவோ வெளிப்படுத்துவதன் மூலம் அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்த முடியும் என ஐக்கிய நாடுகள் தாபனம் குறிப்பிடுகின்றது. (United Nations, 2003).

நீர்ச்சட்டம் (The Water Act, 2002) குறிப்பிடுகையில், குடிநீர் வழங்கல் முகாமைத்துவ முறைமையின் நோக்கம் என்னவென்றால் - 'பயனுள்ள நீர் வழங்கல் முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதுடன் குடிநீர் விநியோகத்தை முகாமைத்துவம் செய்வதற்காக சமூகத்தில் உள்ள மக்களைப் பங்குபெறச் செய்வதுடன் அவற்றுக்கான வழிமுறைகளையும்



Scanned with CamScanner

வசதிகளையும் ஏற்படுத்தி கொடுப்பதாகும்' என வரையறுக்கின்றது. அதேபோன்று, சமூக பங்கேற்பை ஏற்படுத்துவதற்கான முக்கிய எதிர்பார்ப்பு யாதெனில், சமூகங்களை தங்கள் சொந்த அபிவிருத்தி செயற்பாடுகளில் பொறுப்பேற்க செய்வதுடன் அதில் அவர்களை ஈடுபடுத்தி நிலையான அபிவிருத்திக்கான சமூக மூலதனத்தை பெற்றுக்கொண்டு அன்றாட வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என்பதாகும் (World Bank, 2003).

ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சமூகம் என்பது செயல்திறன் மிக்கதாகவும்இ செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகையில் ஏற்படும் பிரச்சினைகளை சிறந்த முறையில் கையாளக்கூடியதாகவும் மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் தன்மையை அனுமதிக்க கூடியதாகவும் அமைய வேண்டும் (Garande & Dagg, 2005). சமுதாயப் பங்களிப்பானது கிராமிய மக்களின் வாழ்வாதார செயற்பாடுகளில் மிதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இன்னும் கூறப்போனால் சமூக பங்கேற்பானது தொடர்ச்சியாக போதியளவு குடிநீரை பெற்றுக் கொள்வதிலும் முறையான விவசாய செயற்பாடுகள் மற்றும் மண் பாதுகாப்பு, நீர் முகாமைத்துவ நிர்வாகம் தொடர்பாகவும் தாக்கத்தை செலுத்துகின்றது.

சமுதாயப் பங்கேற்பு கொள்கையானது கிராம அபிவிருத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒன்றாகும் என கிராமிய அபிவிருத்தி திட்டமிடலாளர்கள் கருதுகின்றார்கள். கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றி பெறவேண்டுமென்றால் அதில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளில் சமூதாயத்தின் பங்களிப்பு நிச்சயம் காணப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, கிராமிய குடிநீர் வழங்கல் முறைமைகளில் சமுதாயப் பங்கேற்பானது திறமையான மற்றும் நிலையான திட்டங்களை வகுப்பதற்கு முக்கிய உத்தியாக கருதப்படுகிறது. மேலும் எந்தவொரு கிராமிய நீர் வழங்கல் முறைமைகளையும் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் வெற்றி அடைய செய்ய முடியாது (Cited in; Chukwuma, 2016). இதன்படி சமூக பங்கேற்பு எனும் விவகாரம் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் ஆராயப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ் அணுகுமுறை தொடர்பான வெளியீடானது செயல்திறன் மிக்கதாக உள்ளது எனவும் அறிய முடிகின்றது.

ஐக்கிய நாடுகள் (UN) தாபனம் வெளியிட்டுள்ள நிலையான அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையின்படி, சமுதாயப் பங்கேற்பானது 'அபிவிருத்தி செயற்பாடுகளில் சமூக உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதோடு சமத்துவத்தை பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது'. இந்தவகையில் நோக்கும்போது, கிராமிய குடிநீர் விநியோகச் செயற்திட்டங்களில் மக்களின் பங்கேற்பானது நிலையான தன்மையை உறுதி செய்வதுடன் செயல்திறன் வாய்ந்ததாகவும் அமையும். மேலும் சமூக பங்கேற்பானது சமூக வாழ்க்கை தொடர்பான உணர்வினை ஊக்குவிக்கின்றது. இது சாதாரணமாக செயற்திட்ட செயற்பாடுகளில் மக்கள் ஈடுபடுவதனை மாத்திரம் குறிப்பிடாமல் இது கிராமிய மக்களின் தேவைகளை அடையாளம் கண்டுகொள்ளல், அவற்றை ஒழுங்கமைத்தல், சமூக செயற்திட்டங்களை வடிவமைத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்ளவும் உதவுகின்றது. கிராமிய நீர்வழங்கல் திட்டங்களில் சமூக பங்கேற்பானது சமூகங்களின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முக்கிய அம்சமாக காணப்படுகின்றது (Harvey & Reed, 2007). குறிப்பாக இச் செயற்திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சமூகங்கள் தங்களுக்கு தேவையான, போதுமான நீர் விநியோக முறைமைகளை பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதும் முக்கிய விடயமாகும்.

அதேபோன்று யுனிசெப் (ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர்களின் கல்விக்கான நிதியம்) (UNICEF, 2015; cited in: Chukwuma, 2016)



Scanned with CamScanner

குறிப்பிடுகையில், உலக சனத்தொகையில் 3 பில்லியன் மக்கள் குடிநீர் அழுத்தம் கொண்ட நாடுகளில் வசிப்பதோடு தங்களது அடிப்படை குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் சவால்களை எதிர் கொள்கின்றார்கள். மேலும் அதே அறிக்கையின்படி, 2000-2015ஆம் ஆண்டினுடைய மில்லேனிய அபிவிருத்தி இலக்குகள் (Millennium Development Goals - MDGs) இன் நோக்கு நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்குகின்ற மக்கள் தொகையை உலகளாவிய ரீதியில் அரைவாசியாகக் குறைப்பதாகும். இவ் அறிக்கையின்படி உலகில் காணப்படும் அபிவிருத்தி அடைந்து வரும் 6 பிராந்தியங்களான ஆபிரிக்கா, ஓசியானியா, இலத்தின் அமெரிக்கா, தென்கிழக்காசியா, தெற்காசியா, வட-ஆசியா (Africa, Oceania, Latin America, South East Asia, South Asia and Northern Asia) போன்ற பிரதேசங்களில் வசிக்கின்ற கிராமப்புற மக்களில் பெரும் பகுதியினருக்கு போதுமான அளவு குடிநீர் கிடைக்கப் பெறுவதில்லை. இந்நிலைமை இம்மக்களின் வாழ்க்கை தரத்தை மலினப்படுத்துவதுடன் கிராமிய சமூகப் பொருளாதார அடிப்படையிலான சமூக வளர்ச்சியையும் பாதிக்கின்றது.

மேலும் பயனுள்ள சமுதாயப் பங்கேற்பானது, கிராமிய நீர் விநியோகத் திட்டத்தில் காணப்படுகின்ற அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளில் பயனாளிகள் ஈடுபடுத்துவதுடன் நிலைத்துநிற்கும் தன்மையுள்ள திட்டங்களை செயற்படுவதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்துகின்றது (Charlet & Nevot, 2011; cited in: Chukwuma, 2016). சமுதாய பங்கேற்பானது சமூகங்கள் மத்தியில் செயற்திட்டங்கள் தொடர்பாக தமது உரிமை அடையாளம் காணச்செய்வதுடன்இ சமூகத்தின் அனைத்து பிரிவுகளிலும் நம்பகத்தன்மையை உறுதி செய்கின்றது (Ishaku & Majid, 2010). ஏனென்றால் இது சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களால் திட்டமிடப்பட்டது.

மேலும், குடிநீர் விநியோகத் திட்டங்கள் சமூக அபிவிருத்தி தொடர்பான புதிய கருத்துகளைக் கொண்டு அமைந்துள்ளது என 1992ல் டப்லின் (Dublin) இல் இடம்பெற்ற 'குடிநீர் மற்றும் சுற்றுச்சூழலுக்கான' சர்வதேச மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. அதில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

(1) குடிநீர் விநியோகத்தின் அத்தியவசியம் மற்றும் வரையறுக்கப்பட்ட தன்மை.

(2) செயற்திட்டங்களில் பங்கேற்பு அணுகுமுறையின் முக்கியத்துவம்.

(3) குடிநீரை விநியோகிப்பதிலும் நிர்வாகிப்பதிலும் பெண்களின் முக்கிய பங்கு.

(4) குடிநீரின் பொருளாதார பரிமாணம் போன்ற விடயங்கள் விவரிக்கப்பட்டன.

இக்கருத்துக்கள் சமூகங்களினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முக்கியத்துவம், அவற்றில் பெண்களின் ஈடுபாடு, மக்களின் வீட்டுத் தேவைகளுக்கான தொழில்நுட்பம்இ மற்றும் செயற்திட்டங்களின் நிர்வாகம் முகாமைத்துவம் போன்றவற்றில் பயனாளிகளின் பங்களிப்பு போன்றன பற்றி கருத்துரைக்கின்றது (Sara, Gross & Berg, 1997; and Whittington, Davis, Procopy et.al. 2008).

மோவ்றா, மாயர் மற்றும் டர்பீ (Moura, Mayer & Durfee, 2007) குறிப்பிடுகையில், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விநியோக செயற்திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பானது நிலையான குடிநீர் வழங்களை உறுதிப்படுத்தும் உத்தியாக கொள்ளப்படுகிறது. இவ் அணுகுமுறையின் முக்கிய நன்மை என்னவென்றால், சமூக அங்கத்தவர்கள் மத்தியில் உரிமத்தை (ownership) ஊக்குவிப்பதுடன் திட்டங்களால் பெறக்கூடிய நன்மைகள் நீண்ட



Scanned with CamScanner

காலத்திற்கு நிலைத்திருக்கவும் வாய்ப்பாக அமைகின்றது. இதன்படி திட்டத்தின் முழு கட்டுப்பாடும் சமூக உறுப்பினர்களிடம் காணப்பட வேண்டும் என்ற கருத்தை இவர்கள் முன்வைக்கின்றார்கள்.

மேலும், பாரம்பரியமாக நிலவி வரும் பாலினப் பாகுபாடு குடிநீர் தொடர்பான விடயங்களிலும் தொடர்ந்தும் இடம்பெறுகின்றமையால், பொதுவாக அனைத்து செயற்பாடுகளிலும் பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்த அல்லது மேம்படுத்த வேண்டும். ஏனென்றால் அவளே வீட்டில் அனைத்து தேவைகளையும் நிர்வகிக்கின்றாள்- உடைகளைக் கழுவுதல், பாத்திரங்கள் கழுவுதல், வீட்டை சுத்தம் செய்தல், உணவு தயாரித்தல், பிள்ளைகளை கவனித்தல் மற்றும் சில வேளைகளில் விவசாய செயற்பாடுகளிலும் ஈடுபடுதல் - இவ்வகையில் பெண்கள் குடிநீர் மற்றும் சுகாதார செயற்பாடுகளில் முதன்மை செயற்பாட்டாளர்களாக ஈடுபடுத்தும்போது, செயற்திட்டங்களில் அவர்களின் பங்களிப்பை எல்லா இடங்களிலும் முன்கொண்டு வருவதுடன் தீர்மானம் எடுக்கும் முறைமைகளிலும் அவர்கள் உள்வாங்கப்-படுவதற்கும் ஏதுவாக அமையும் (Tripathi & Lal, 2001). அத்துடன் சமுதாய முயற்சிகள், திறன்கள் என்பன உண்மையில் முக்கியமானவையாகும். எனவே, அரசை விட, அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்களை விட, பங்குதாரர்கள், குறிப்பாக சமுதாயத்தினர் அனைத்து நீர் விநியோக செயற்பாடுகளிலும் முதன்மைப்படுத்தும் போது அத்தகைய திட்டங்களின் பொறுப்புக்கள் அனைவராலும் பகிரப்படுவதுடன், திட்டம் வெற்றியடையவும் மக்கள் அதன் பயனை சமனாகப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்புள்ளது.

எனவே, நிலையான நீர் வழங்கல் திட்டம் ஒன்றில் சமூக உறுப்பினர்களின் பங்களிப்பானது பல்வேறு கூறுகளாக அமைந்திருக்கும்: அதாவது -திட்டம் தொடர்பான செயற்பாடுகள், முகாமைத்துவம், தொழில்நுட்பம், நிதி நிர்வாகம், செயல்படுத்துவதற்கான செலவுகளைப் பகிர்ந்தளித்தல்இ திட்டம் தொடர்பிலான முடிவுகளை எடுத்தல் மற்றும் சமுதாய உரிமத்தை (community ownership) ஏற்படுத்தல் போன்றனவாகும் (Lockwood, 2004). மேலும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, கிராமிய நீர் வழங்கல் முறைமையில் சமுதாயத்தின் பங்களிப்பானது பயனுள்ள உத்தியாக கருதப்படுகின்றது. அத்துடன் சுத்தமான குடிநீர் வழங்குதல் தொடர்பிலான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகின்றது. சமுதாயப் பங்கேற்பு மக்கள் மத்தியில் பொறுப்புணர்வை ஏற்படுத்துவதுடன் நிர்ணயிக்கப்பட்ட அல்ல நன்கு திட்டமிட்ட சமூக இலக்குகளை அடையப் பெறுவதற்கும் உதவுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை ஊக்குவிப்பதில் சமுதாயப் பங்கேற்பு எனும் அணுகுமுறை முக்கிய பங்காற்றுகின்றது (Bah, 1992) எனக் குறிப்பிடலாம் (Haq, Hassan & Ahmad, 2014).

## முடிவுரை

மனிதன் தனது தேவையைப் பூர்த்தி செய்யவும் உயிர் வாழவும் சுத்தமான குடிநீரைப் பெறுவது ஓர் அடிப்படை உரிமையாகும். எனினும் பல்வேறு நீர் வழங்கல் திட்டங்களில் குறிப்பாக கிராமிய குடிநீர் விநியோகத் திட்டங்கள் சமுதாய-மையத் திட்டங்களாகவே அமைந்துள்ளன. ஏனெனில் ஒரு திட்டத்தின் பயனாளிகள் அத்திட்டத்தில் ஈடுபடும்போது, தீர்மானம் எடுக்கும் போது அத்திட்டமானது உரிய இலக்கை அடையவும் வெற்றிபெறவும் ஏதுவாக அமையும். சமுதாயத்தின் பங்களிப்பானது குடிநீர் வினியோகத் திட்டங்களில் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றுள்ளன. அவை பல்வேறு ஆய்வுகளின் பின்னணியில் நின்று இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. சமுதாயத்தின் பங்களிப்பானது பணம்,



Scanned with CamScanner

தொழிலாளர் உழைப்பு மற்றும் பொருள்கள் என்று பொதுவான வழிகளில் காணப்படுகின்றது. இவை கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கின்றது (Davis & Iyer, 2002). எனவே, கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் வெற்றியானது சமுதாயப் பங்களிப்புடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது (Ishaku & Majid, 2010) என்பது இக்கட்டுரையில் கண்டறியப்பட்ட முக்கிய பெறுகையாகும்.

அத்துடன் நீர்வழங்கல் திட்டங்களில் மக்கள் ஈடுபடும்போது அவர்கள் மத்தியில் சமூக உரிமம் அல்லது உரித்துரிமை (social ownership) ஏற்படுத்தப்படுவதால் அத்தகைய திட்டங்கள் வெற்றியடைவதுடன் நிலைத்துநிற்கும் தன்மை வாய்ந்ததாகவும் அமைகின்றன (Bill, 2007). எனவே, சமுதாயப் பங்கேற்பு எனும் பொறிமுறை ஒரு திட்டம் தயாரிக்கப்படுவதில் இருந்து தொடங்கி, அத்திட்டத்தின் நடைமுறை, தீர்மானம் எடுத்தல், நிர்வகித்தல், இயக்குதல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற பல தரங்களிலும் அமைய வேண்டும். அவ்வாறு அமையுமிடத்து குறித்த செயற்திட்டம் வெற்றியடையவும் நிலைத்து நிற்கவும் வாய்ப்புள்ளது எனும் விடயம் இக்கட்டுரையில் கண்டறியப்பட்டு ஆழமாக விவரிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதிகரித்து வருகின்ற மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு குடிநீர் விநியோகத் திட்டங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. அத்துடன் அத்தகைய திட்டங்களில் பயனாளர்கள் (சமுதாயத்தினர்) உள்வாங்கப்படுவதும் அதில் அவர்களின் பங்கேற்பினை உறுதி செய்வதும் மிக முக்கிய விடயங்களாக அமைகின்றன. இத்தகைய விடயங்களை கவனத்தில் கொள்வது அரசினதும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களினதும் நிதி வழங்கும் முகவர்களினதும் பாரி பொறுப்பாகும். எனவே, பல்வேறு ஒழுங்கமைப்புகளால் பயனாளர் குழுக்களுக்கும், நீர்வழங்கல் திட்டங்களை இயக்குபவர்களுக்கும் கிராமிய நீர் வழங்கல் தொடர்பான விழிப்புணர்வு, பயிற்சிகள் என்பன வழங்கப்பட வேண்டும் என்பதை இக்கட்டுரை பரிந்துரைக்கின்றது.

**References:**


Bah, O.M. (1992). Community Participation and Rural Water Supply Development in Sierra Leone. Community Development Journal. 27(1): 30-41. URL: https://www.jstor.org/stable/44259235

Bill, B. (2007). Participatory planning approaches to community interventions. The World Bank Participation Source Book. Retrieved From: https://doi.org/10.1596/0-8213-3558-8

Briscoe, J. (1993). When the Cup is Half Full. Environment: Science and Policy for Sustainable Development. 35(4): Tylor and Francis Group. DOI: 10.1080/00139157.1993.9929091

Chambers, R. (2007). Participation and Poverty. Development, 50(2):20-25. Palgrave Macmillan. DOI: doi:10.1057/palgrave.development.1100382

Chukwuma, O.M. (2016). Community Participation in the Rural Water Supply Sector of Enugu State, Nigeria. America Journal of Water Resource. 4(3): 58-67. http://pubs.sciepub.com/ajwr/4/3/2

Cosgrove, W.J. and Rijsberman, F.R. (2000). World Water Vision: Making Water Everybody's Business. World Water Council. London: United Kingdom. EarthCan Publications. DOI: 10.4324/9781315071763 [Research Gate].

Davis, J. and Iyer, P. (2002). Taking Sustainable Rural Water Supply Services to Scale: A Discussion Paper. Water and Sanitation Program. Washington DC. Retrieved from: https://watsanmissionassistant.org/wp-




Scanned with CamScanner

content/uploads/2018/10/taking-sustain-rural-water-supply-services-to-scale-bnwp.pdf

Garande, T. and Dagg, S. (2005). Public Participation and effective water governance at the local level. A case study from small under-developed area in Chile. Ethiopian Journal of Environmental Studies & Management. 9(2): 245-254. DOI: http://dx.doi.org/10.4314/ejesm.v9i2.12

Haq, M.A., Hassan, S.M., and Ahmad, K. (2014). Community Participation and Sustainability of Water Supply Program in District Faisalabad, Pakistan. Journal of Quality and Technology Management. December 2014; X(II). 125-137. [Research Gate].

Harvey, P. and Reed, R. (2006). Sustainable supply chains for rural water supplies in Africa. Proceedings of the Institutional of Civil Engineers. Engineering Sustainability. 159(1): 31-39. DOI: https://doi.org/10.1680/ensu.2006.159.1.31

Harvey, P.A., & Reed, R. A. (2007). Community-Managed Water Supplies in Africa: Sustainable or Dispensable? Community Development Journal. July 42(3): 365-378. URL: https://www.jstor.org/stable/44259060

Ishaku, H.T., and Majid, M.R. (2010). Community Participation: Alternative approach to water supply in Nigerian rural communities. Conference paper. The International Conference on Built Environment in Developing Countries (ICBEDC 2010). 1 - 2 Dec 2010. USM. Pulau Pinang. Malaysia. [Research Gate].

Lockwood, H. (2004). Scaling-up Community Management of Rural Water Supply. Delft: IRC-International Water and Sanitation Centre

Mamburi, P.N. (2014). Factors Influencing Community ownership of Water Projects in Kenya. A Case of Kinas Division, Isiolo Country. Unpublished Thesis of University of Nairobi. Retrieved from: http://erepository.uonbi.ac.ke/handle/11295/74022

Miakatra, L.S. (2014). Community Participation and Water supply in deprived areas of Madagascar. Field Action Science Report [online]. Special issue 11. Retrieved from: http://journals.openedition.org/factsreports/3539

Moura, A.R., Mayer, A.S. and Durfee, M.H. (2007). Community partnered Projects: A Case study of Collaborative Efforts to improve Sanitation in Marginalized Community in Northwest Mexico. Environment Development and Sustainability. 11(1): 197-213. DOI: 10.1007/s10668-007-9104-5

Nyakwaka, S., Benard, M.K. (2019). Factors Influencing Sustainability of Community Operated Water Projects in Central Nyakach Sub-Country, Kisumu Country, Kenya. International Journal of Academic Research in Business and Social Sciences. 9(7): 108-130. DOI: 10.6007/IJARBSS/v9-i7/6096

OECD. (1985). Management of water projects; Decision making and investment appraisal, Paris, France: Organization for Economic Development.

Oino, P.G., Kirui, K. K., Towett, G. and Luvega, C. (2015). The Dilemma in Sustainability of Community based Projects in Kenya. Global Journal of Advanced Research. 2(4): 757-768. Retrieved from: http://www.gjar.org/publishpaper/vol2issue4/d177r18.pdf



Scanned with CamScanner

Olajuyigbe, A.E. (2016). Community Participation and Sustainability Issue: An Evalution of a Donor - Driven Water Sector in Ikaram Millennium Village Project. Open Journal of Social Sciences. 4(4): 90-103. DOI: DOI: 10.4236/jss.2016.46010 [Research Gate].

Sara, J. Gross, A. and Berg, V.D. (1997). Rural Water Supply and Sanitation in Bolivia - from Pilot to National Program. Working Paper. Food & Agricultural Organization - United Nations. The World Bank Publication.

The Water Act 2002. (October 24, 2002). Laws of Kenya. Chapter 372. National Council for Law. The Government Printer. Kenya: Nairobi.

Tripathi, S.K., and Lal, B. (2001). Community Participation in Rural Water Supply - Indian Initiative. 27th WEDC Conference. 'People and Systems for Water, Sanitation and Health' 2001. Lusaka: Zambia.

United Nations. (2003). Water for people, Water for life: World Water Assessment Programme (WWAP). World Water Development Report, Paris. UNESCO and New York: Berghahn Books.

Waithaka, A., Kisovi, L.M. And Obando, J. (2016). The Impact of Community Participation in Rural Water Management in Ndarugu- Thiririka Sub-Catchment, Athi Basin, Kenya. Ethiopian Journal of Environmental Studies & Management. 9(2): 245-254. DOI: http://dx.doi.org/10.4314/ejesm.v9i2.12

Whittington, D. Davis, J. Prokopy, L. Thorsten, R. Lukas, H. Bakalian, A. and Wakeman, W. (2008). Community Management Model for Rural Water Supply Systems Doing ? Evidence from Bolivia, Peru and Ghana. BWPI Working Paper 22. Available at: http://ssrn.com/abstract=126532

World Bank- UNDP. (2001). Water and Sanitation. 1999-2000 Report. Water Sanitation Division. Washington D.C.: The World Bank.

World Bank. (2003). Community-Driven Development: A Study Methodology. Washington DC: The World Bank



Scanned with CamScanner